பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

10 12 2025 7 15

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. 6G தொழில்நுட்ப புதுமை முயற்சிகளை விரைவுபடுத்த மத்திய அரசு உறுதிபூண்டிருப்பதாக தொலைதொடர்புத்துறை அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

2. மத்திய அரசு ஊழியர்களுக்கு உரிய நேரத்தில் பதவி உயர்வு வழங்க நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர். ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

3. மேற்குவங்கத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த படிவத்துடன் போலி ஆவணங்களை சமர்ப்பிக்கும் வாக்காளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது.

4. ஆஸ்திரேலியாவில் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கான தடை நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

5. உலகக்கோப்பை ஸ்குவாஷ் போட்டியின் தொடக்க ஆட்டத்தில் இந்தியா 4-0 என்ற புள்ளிக்கணக்கில் சுவிட்சர்லாந்தை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தில், இந்தியாவை உலகின் முன்னணி நாடாக திகழச் செய்ய, 6-G தொழில்நுட்ப புதுமை முயற்சிகளை விரைவுபடுத்த, மத்திய அரசு உறுதி பூண்டிருப்பதாக, தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் திரு.ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று, பாரத் 6-ஜி இயக்கத்தின் உயர்மட்ட கவுன்சில் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய அவர், இந்தியாவின் 6-ஜி கூட்டணியில் இடம்பெற்றுள்ள ஏழு பணிக் குழுக்களும், மிகுந்த ஒருங்கிணைப்புடன் செயல்படுவது அவசியம் என்று வலியுறுத்தினார்.

இந்தக் குழுவினர் அடிக்கடி கூடி, ஒத்துழைப்பை மேம்படுத்துவதோடு, குழுவாக பணியாற்றும் மனப்பாண்மையை வலுப்படுத்துவதோடு, குழுவின் முயற்சிகள் ஒரே பாதையில் செல்வதை உறுதி செய்யுமாறும் திரு.ஜோதிராதித்ய சிந்தியா கேட்டுக் கொண்டார்.

<<<<>>>>

மத்திய அரசு ஊழியர்கள் சிறப்பாக பணியாற்றுவதை ஊக்குவிக்கும் விதமாக, அவர்களுக்கு உரிய நேரத்தில் பதவி உயர்வு வழங்க, அரசு நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக, பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், மத்திய அரசின் செயலகத்தில் பணியாற்றும் குரூப்-சி பணியாளர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய அவர், மத்திய செயலகப் பணி, மத்திய செலக சுருக்கெழுத்தர் பணி மற்றும் மத்திய செயலக எழுத்தர்கள் பணி ஆகிய மூன்று பிரிவினருக்கும், பெருமளவில் பதவி உயர்வு வழங்கப்பட்டு வருவதை சுட்டிக்காட்டினார்.

முந்தைய ஆட்சிக் காலத்தில், பதவி உயர்வு தொடர்பான கோப்புகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்தி வந்த நிலையில், இட ஒதுக்கீடு பிரிவினருக்கான, பின்னடைவு காலிப் பணியிடங்களையும் பதவி உயர்வு மூலம் பூர்த்தி செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 2022 ஜூன் 30-ந் தேதி மட்டும் 8 ஆயிரத்திற்கும் அதிகமானோருக்கு பதவி உயர்வு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள நிலையில், அதன்பின் 2024ம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் 16 ஆயிரத்து 200 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டிருப்பதாகவும் திரு.ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

<<<<>>>>

நீர்வள மேலாண்மையில், புதுமைக் கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்கான, ‘ஜல்சக்தி ஹேக்கத்தான்-2025’ மற்றும் Bharat-Win இணையதளத்தை, மத்திய ஜல் சக்தித் துறை அமைச்சர் திரு.சி.ஆர்.பாட்டீல், தொடங்கி வைத்தார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்த ஹேக்கத்தான் போட்டி, பாதுகாப்பான, உள்ளடக்கிய மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த தண்ணீர்

எதிர்காலத்தை உருவாக்க, நாட்டின் கூட்டுத் திறமையை திரட்டுவதற்கான தேசிய இயக்கமாகத் திகழும் என்றார்.

இத்தகைய புதுமையான முயற்சிகள், நீர்வள ஆராய்ச்சிக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதுடன், பல்வேறு தரப்பினரின் பங்களிப்பை உறுதி செய்யும் என்றும், திரு.சி.ஆர்.பாட்டீல் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இந்தியா - சிங்கப்பூர் இடையிலான நட்புறவு, பரஸ்பர நலன் மற்றும், அமைதி, வளர்ச்சி, முன்னேற்றத்திற்கான பொதுவான தொலைநோக்கு அடிப்படையில் அமைந்தது என்று, சிங்கப்பூர் பிரதமரின் முதுநிலை ஆலோசகர் திரு. Teo Chee Hean தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், முன்னாள் பிரதமர் வாஜ்பேயி நினைவு சொற்பொழிவு நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், எதிர்கால சவால்களுக்கு புதுமையான தீர்வுகளை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

அரசு, தொழில்துறையினர், குடிமக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரின் நீடித்த மற்றும் பல தலைமுறைக்கேற்ற முயற்சிகள் தான் வெற்றியடையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பல்வேறு துறைகளிலும், இந்தியாவுடன் இணைந்து செயல்பட, நம்பிக்கைக்குரிய நாடாக சிங்கப்பூர் திகழும் என்றும் அவர் கூறினார்.

சிங்கப்பூரின் பெயர் சமஸ்கிருத மொழியிலிருந்து உருவாக்கப்பட்டு இருப்பது, தென்கிழக்கு ஆசியாவில் இந்தியாவின் செல்வாக்கை எடுத்துக் காட்டுவதாக உள்ளது எனவும் திரு. Teo Chee Hean தெரிவித்துள்ளார்.

முன்னதாக அவர், வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது, மத்திய அரசு மேற்கொண்டுவரும் சீர்திருத்தங்கள் காரணமாக, இந்தியாவில் முதலீட்டிற்கான வாய்ப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக, திரு.ஜெய்சங்கர், தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

கடற்படை தலைமைத் தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி, நான்கு நாள் பயணமாக பிரேசில் சென்றுள்ளார்.

தமது இந்தப் பயணத்தின்போது, பிரேசில் நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் Jose Mucio, அந்நாட்டு முப்படைகளின் தளபதி மற்றும் கடற்படைத் தளபதியையும் சந்தித்து, இருதரப்பு ஒத்துழைப்புகள் குறித்து பேச்சு நடத்த உள்ளதாக, பாதுகாப்பு அமைச்சக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடல்சார் துறையில், இரு நாடுகளிடையேயான தற்போதைய ஒத்துழைப்புகளை மறு ஆய்வு செய்வதுடன், செயல்பாடு அடிப்படையிலான

ஒத்துழைப்புகளை விரிவுபடுத்துவதுடன், புதிய துறைகளில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்தும் ஆலோசிக்கப்பட இருப்பதாக, அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

மேற்குவங்க மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தின்போது போலியான ஆவணங்களை சமர்ப்பிக்கும் வாக்காளர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது.

வாக்காளர் பட்டியலில் தங்களது பெயரை தக்கவைத்துக்கொள்வதற்காக போலியான அடையாள அட்டை அல்லது வசிப்பிட சான்றிதழ்களை சமர்ப்பிப்போர் மீது BNS சட்டத்தின் 337வது பிரிவின்கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு 7 ஆண்டுகால கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும் என்று மேற்குவங்க தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

காசி தமிழ்ச் சங்கமத்தில் பங்கேற்பதற்காக கோவையில் இருந்து 83 பெண்கள் புறப்பட்டுச் சென்றனர்.

நேற்று மாலை புறப்பட்ட இரண்டாவது ரயிலில் கோவை, திருப்பூர், ஈரோடு, ராமநாதபுரம், விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த பெண் எழுத்தாளர்கள், கல்வியாளர்கள், தொழில்முனைவோர் உள்ளிட்டோர் பயணம் செய்கின்றனர்.

காசி தமிழ்ச் சங்கம தமிழகம்-வாரணாசி இடையேயான பாரம்பரியம் மிக்க கலாச்சாரம் மற்றும் ஆன்மிக தொடர்புகளை வலுப்படுத்துவதாக உள்ளது என்று இந்தப் பயணிகள் தெரிவித்துள்ளனர்.

(Voice Byte - Passengers - 48 Sec)

<<<<>>>>

ஆஸ்திரேலியாவில் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கான தடை நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இதன்படி இன்ஸ்டாகிராம், பேஸ்புக், எக்ஸ் தளம், Snap Chat, Threads, Tik Tak, Reddit மற்றும் யூ-டியூப் உள்ளிட்ட சமூக வலைதளங்கள் அரசின் தடை உத்தரவை முழுமையாக அமல்படுத்துமாறு அந்நாட்டு அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

இதனை மீறும் நிறுவனங்கள் மீது 32 மில்லியன் அமெரிக்க டாலர் வரை அபராதம் விதிக்கப்படும் என்றும் ஆஸ்திரேலிய அரசு எச்சரித்துள்ளது.

<<<<>>>>

மத்திய கல்வியமைச்சகம் அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் கவுஜன்சிலுடன் இணைந்து நடத்தும் தேசிய அளவிலான Smart India Hackathon

போட்டி சென்னையை அடுத்த தண்டலத்தில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 23 மாணவர் குழுவினர் பங்கேற்று தங்களது கண்டுபிடிப்புகளை காட்சிக்கு வைத்தனர்.

இந்தப் போட்டி தங்களது திறமையை வெளிப்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது என்று இதில் பங்கேற்ற மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

உலகக்கோப்பை ஸ்குவாஷ் போட்டியின் தொடக்க ஆட்டத்தில் இந்தியா 4-0 என்ற ஆட்டக்கணக்கில் சுவிட்சர்லாந்தை வென்றது.

சென்னையில் நேற்று நடைபெற்ற B பிரிவு ஆட்டத்தில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார், அனாஹத் சிங், அபய் சிங், ஜோஷ்னா சின்னப்பா ஆகியோர் வெற்றி பெற்றனர்.

<<<<The End>>>>